Dinamalar 14-4-2008

# வெள்ளிங்கிரி மலையேறும் பக்தருக்கு இலவசமாக துணிப்பை வினியோகம்

**பேரூர், ஏப். 14-**

வெள்ளிங்கிரி மலையேறும் பக்தர்களுக்கு, ஈஷா பசுமை கரங்கள் திட்டத்தில் இலவசமாக துணிப்பைகள் வினியோகிக்கப்பட்டன; மொத்தம் 13 ஆயிரத்து 500 துணிப்பைகள் வழங்கப்பட்டன.

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியான, வெள்ளிங்கிரி மலையில் ஆயிரக்கணக்கான மூலிகை தாவரங்களும், வன விலங்குகளும் உள்ளன. இம்மலையில், ஆண்டுதோறும் மகா சிவாத்திரி முதல் சித்ரா பவுர்ணமி வரை தமிழகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பக் தர்கள் ஏழு மலையேறி வெள்ளிங்கிரி மலை ஆண்டவரை தரிசிப்பது வழக்கம். பக்தர்கள் மலையேறும் போது, பிளாஸ்டிக் பொருட்களை மலைப்பகுதிகளில் ஆங்காங்கே எறிந்து விடுவதால், வனப்பகுதியிலுள்ள உயிரினங்களின் வாழ்க்கைக்கு ஆபத்து அதிகமாகியுள்ளது.

இதையடுத்து வனத்துறை, ஈஷா யோக மையம், எல்.ஐ.சி., பூண்டி கோவில் நிர்வாகம் இணைந்து மலைப்பகுதியை சுத்தகமாக வைத்திருக்கவும், பக்தர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை செய்து வருகின்றன. இதற்காக, வெள்ளிங்கிரி மலையேறும் பக்தர்களுக்கு, ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் சார்பில், துணிப்பை வினியோகிக்கப்பட்டது.

இக்கரை போளுவாம்பட்டி தலைவர் சதானந்தம், கோவில் அறங்காவலர் தலைவர் தரும ஆறுமுகம் ஆகியோர் துணிப்பை வினியோகித்தனர். கோவில் நிர்வாக அதிகாரி ராஜ்மோகன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



ஈஷா அறக்கட்டளை மற்றும் லைப் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேசன் ஆப் இந்தியா சார்பில், வெள்யங்கிரி மலையேறும் பக்தர்களுக்கு இலவசமாக துணிப்பை வழங்கப்பட்டது.